REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# உண்மை
# UNMAI

இதழ் 4 | மாதம் இருமுறை | விலை ரூபா 4.00

University of Jaffna Sri-Lanka
RECEIVED
1989-0-27
Periodicals Division
Library

உள்ளே----

- கேள்வி-பதில்
- யார் இவர்? கண்டுபிடியுங்கள்
- ஆளும் கட்சியின் அரக்கத்தனம் அரச ஊழியர்கள் தாக்கப்படுகின்றனர்
- சோரம்போன இயக்கங்கள் சோசலிசம் பேசுகின்றன
- கருத்து சொன்னவரிடம் விளக்கம் கேட்கப்படுகிறது

# புலிவேட்டை தொடர்கிறது

# வட - கிழக்கு எரிகிறது!

அரசு-புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பமான நாள் தொடக்கம் தமிழ் மக்கள் பாதுகாப்பு எனக்கூறிக்கொண்டு வட-கிழக்கில் நிலைகொண்டிருக்கும் இந்திய ஆக்ர மிப்பு படையினதும் அவர்களின் கைக்கூலி இயக்கங்களும் புலி வேட்டையும் ஏக காலத்தில் கட்டாய இராணுவ பயிற்சிக்கு பலாத்காரமாக ஆள்திரட்டும் நடவடிக்கை யும் வெகுதீவிரமாக நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

இவ்விரு நடவடிக்கைகளின் போது வட-கிழக்கு அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிராக செல் தாக்குதல்களும், மிருகத்தனமான தாக்குதல்களும், வீடெரிப்பு' உடமை எரிப்பு சம்பவங்களும், கொள்ளையடிப்புக்களும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இந்த லட்சணத்தில்தான் தமிழர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்வரை தாம் இங்கிருக்க வேண்டும் என இந்தியா பட்டும் படாமலும் தனது ஆக்கிரமிப்புக் கொள்கையை நியாயப்படுத்த முனைகிறது. இவ்விதமாக தமிழர்களின் நாமத்தால் எமது தாயகத்தையே ஆக்கிரமிக்கும் நோக்குடன் செயல்படும் அன்னிய சக்திகளினுல் ஒரு சில தனி நபர்களுக்கு வழங்கப்படும் அற்ப சொற்ப சுகபோகங்களுக்காக முழு சமூகத்தையும் சொந்த நாட்டையும் காட்டிக்கொடுக்கும் இவர் கும்பல்களால் இந்த நாட்டைக் காட்டிக்கொடுத்த எட்டப்பர்கள் என்ற அவப்பெயர் இலங்கை வரலாற்றில் தமிழ் சமூகத்துக்கு வழங்கம் ஏற்படாவண்ணம் விடுதலைப் புலிகள் புத்தி சாதுர்யமாக நடந்து கொண்டமையை பாராட்டாமல் இருக்க முடியாது. எமது பிரச்சினைகளை நாம் பேசி தீர்த்துக்கொள்ளமுடியும் என்ற நிலைப்பாடு நிரூபிக்கப்பட்டுவரும் இவ்

(7ம் பக்கம் பார்க்க)

## ஆள் பிடி கூட்டத்தினரால் ஐவர் கைது

இச்சோகசம்பவம் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ளது. இதுபற்றி தெரிய வருவதாவது! சில மாதங்களாக வட-கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வரும் ஆள்பிடி அராஜகத்

(7ம் பக்கம் பார்க்க)

## அரக்கர்களின் அராஜகம்! அப்பாவி இளைஞர்கள்
# தற் கொலை!

மனதை உருக்கும் இச் சம்பவம் அண்மையில் மட்டக்களப்பு களுதாவளை என்னும் கிராமத்தில் நடைபெற்றுள்ளது. இதுபற்றி தெரியவருவதாவது டெலோ இயக்கத்தால் கட்டாய பயிற்சிக்கு பிடிக்கப்பட்டு பின்னர் சுகவீனம் காரணமாக விடுபட்ட

(7ம் பக்கம் பார்க்க)

## எச்சரிக்கை!

வட-கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட்டுள்ள தொண்டர் படையில் அன்னிய படையின் ஆதரவு இயக்கங்களை சேர்ந்த கிரிமினல்களுக்கு உயர்பதவிகள் வழங்கப்படுகின்றன. சட்டத்தையும் ஒழுங்கையும் கிரிமினல்களால் நிர்வாகிக்கப்பட்டால் நிலைமையை சொல்லியா தெரிய வேண்டும். பாவம் வட-கிழக்கு அப்பாவி தமிழ் மக்கள்.

வாழ்க ஜனநாயகம்!
உறுதியாகட்டும் தமிழர் பாதுகாப்பு!
வாழ்க கிரிமினல்கள்!

## விடுதலைப் புலிகளின் பயங்கர தாக்குதல்
## இந்தியப்படையின் ஆயுதம்பறிமுதல்!
# 18 அன்னிய படை பலி!

அண்மையில் மாலை 6-35 மணியளவில் மட்டக்களப்பு பிரதேசத்தின் மருதம்குளம் என்னும் கிராமத்தில் இருந்து மண்ணம் பிட்டி நோக்கி ஹாயாக நடைபவனி வந்த இருபத்திஐந்து அன்னிய ஆக்கிரமிப்பு இராணுவத்தினரை நோக்கி விடுதலை புலி கரந்தடிப் படையினர் தொடுத்த பயங்கரத் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாது திணறிய அன்னிய ஆக்கிரமிப்பு படையினரில் பதினெட்டு படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனைய படையினர் குய்யோ இது முறையோ என கதறி கதறி திரும்பி பார்க்காது ஓட்டம் பிடித்தனர்.

சுமார் ஒருமணி நேரம்

(5ம் பக்கம் பார்க்க)

முற்போக்கு அரசியல் நடுநிலை செய்தி பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை
UNMAI

செப்டம்பர் 01 வெள்ளிக்கிழமை 1989


## அரசு அலுவலகங்களில் அதிகாரிகள் சிரத்தையுடன் செயல்பட வேண்டும்

அண்மையில் மட்டக்களப்பு கச்சேரி தலைமை உதவி அரச அதிபர் மாகாணசபை ஆளுங்கட்சி கூட்டணி இயக்கமொன்றால் தாக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. புனர்வாழ்வு கொடுப்பனவு தொடர்பாகவே இவர் சம்பந்தப்பட்ட இயக்கத்தால் தாக்கப்பட்டதாக தெரிய வருகிறது. இக்காரணத்திற்காக அவரை தாக்கியது நியாயமென கூறவரவில்லை. ஆயினும் தாக்கப்படக்கூடிய அளவுக்கு அதிகாரிகள் நடந்து கொண்டிருக்க மாட்டார்கள் என கூறுவதற்குமில்லை. வட-கிழக்கு மாகாணங்களின் இன்றைய நிலையை பொறுத்தவரை சட்டம், நீதி, ஒழுங்கு என்பவைகள் நீண்டகால ஓய்வு எடுத்து கொண்டு விட்டன. இச் சந்தர்ப்பத்தை அதிகாரிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தமக்கு தேவையானவர்கள் தம்மை திருப்திப்படுத்தக்கூடியவர்கள் என்ற வகையில் செயல்பட்டு வருவதும் மறுக்க முடியாதது.

அதிகாரிகளின் பாரபட்சமான அப்பாவி மக்களுக்கெதிரான நடவடிக்கைகளால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வரும் பொதுமக்கள் இன்றைய சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி ஆயுதபாணிகளான குழுக்களிடம் முறைப்படுவதும் பொதுமக்களின் வெறுப்பை சரமாரியாக சம்பாதித்திருக்கும் ஆயுதபாணிகளும் பொதுமக்களின் நன்மதிப்பை பெற்றுவிட அதிகாரிகளுக்கெதிராக வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதும் வழக்கமாகி வருகிறது. இவ்வாறான வழிமுறைகள் வரவேற்கத்தக்கதல்ல. அதேவேளை பொதுமக்களின் எதிர்பார்புகளெல்லாம் நியாயமானது எனவும் கூறுவதற்கில்லை.

இவை எல்லாவற்றிக்கும் முற்றுப் புள்ளியிட்டு சுமுகமாக தமது பணிகளை அதிகாரிகள் நிறைவேற்ற உதவக்கூடியது அரச அதிகாரிகள் தமது பணிகளை சரிவர செய்ய முன்வருவதே. தவறின் ஆயுதபாணிகளின் அராஜக நடவடிக்கைகளை மக்கள் ஆதரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடும் என்பது ஜீரணிக்க முடியாத உண்மை, எனவே வன்முறைகளுக்கு வழிகாட்டும் வழிமுறைகளை அரச அதிகாரிகள் கைவிட்டேயாக வேண்டும்.

## வல்வையில் அகோரம்!
## 150க்குமேற்பட்ட தமிழர்கள் படுகொலை
## இனிமேலும் இ.படை இங்குதேவையா?

வல்வெட்டித்துறை பகுதியில் அண்மையில் நடைபெற்ற புலி வேட்டையின்போது விடுதலை புலி கரந்தடி படையினருடன் மோதிய அன்னிய படையினர் 13பேர் பலி கொள்ளப்பட்டனர். இத்தாக்குதலில் விடுதலை புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை எனவும் தெரியவருகிறது.

இச்சம்பவத்தை தொடர்ந்து அன்னியப் படையின் தாக்குதல்கள் அப்பாவி தமிழர்களுக்கெதிராக திருப்பப் பட்டுவிடும் என்பதை அறிந்த அப்பகுதி மக்கள் தமது சொந்த வீடுகளை விட்டு வெளியேறி கோவில்களிலும் அயல் கிராமங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். இதையறிந்த தமிழர் பாதுகாப்பு படையும் அன்னிய ஆக்கிரமிப்பு ராணுவமும் அப்பகுதிகளுக்கு சென்று அப்பாவி மக்களுக்கு எதுவித இடையூறும் ஏற்படுத்த மாட்டோம் என உத்தரவாதமளித்து மீண்டும் சொந்த இடங்களுக்கு திரும்பும்படி அழைப்பு விடுத்ததை தொடர்ந்து அதை நம்பி ஏமாந்து அப்பாவியான அம்மக்கள் சொந்த இல்லம் திரும்பியதும் திடீர் என வல்வை பகுதியில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டு புலி வேட்டையை ஆரம்பித்த தமிழர் பாதுகாப்பு படையும் அன்னிய ராணுவமும் கோவில்களில் தஞ்சம் புகுந்திருந்தவர்களில் எஞ்சியவர்களையும் சொந்த வீடு திரும்பியவர்களையும்பொது வான ஓர் இடத்துக்கு அழைத்து பெரியவர், குழந்தை, ஆண், பெண் என பாரபட்சம் பாராது சொறி நாய்களைப் போல் சுட்டு தள்ளினராம்.

இவ்வாறு சுட்டு கொலை செய்யப்பட்ட பலரின் சடலங்களை பெரிய கிடங்குகளில் போட்டு எரிக்கப் பட்ட நிலையில் பல சடலங்கள் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. 23பேரின் சடலங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டதாகவும் அவ்வாறு அடையாளம் காணப்பட்ட சடலங்களில் ஒரு வயது பாலகன் முதல் எழுபத்தி ஐந்து வயது கிழமூதாட்டி வரை அடங்குகிறது எனவும் அங்கிருந்து வந்த செய்திகள் கூறுகின்றன.

இதுமட்டுமல்ல அன்னிய படையின் செல்லடிகளாலும் தீவைப்பு சம்பவங்களாலும் பலரின் சடலங்கள் எரிந்து கருகி சிதைந்த நிலையில் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

திட்டமிட்ட தாக்குதலால் வல்வை மக்களின் பலகோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துடைமைகள் நாசம் செய்யப்பட்டு விட்டது. தமிழ் மக்களை பாதுகாக்க வந்தவர்கள் எனக்கூறும் ஆக்கிரமிப்பு படையின் இத்தாக்குதல் போன்ற அகோரமான தாக்குதலை இதுவரை யாழ் மாவட்டம் கண்டதேயில்லை என கூறுகிறார்கள்.

(ந. யா. நி.)

## யார் இவர்?

### கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்

மாகாணசபை அலுவலாக மாகாணசபைக்குச் சொந்தமான வாகனத்தில் தலைநகருக்கு வந்தவர்களில் ஒருவரை இரவு 7 மணியளவில் காணவில்லை என தலைநகர் பொலிஸ் நிலையம் ஒன்றில் புகார் செய்யப்பட்டதாம். என்ன இருந்தாலும் பெரிய மனிதன் அல்லவா! பொலிஸாரும் மின்னல் வேகத்தில் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தகவல்களை அனுப்பி வைத்தனராம். என்ன ஆச்சரியம்! அண்மையில் உள்ள பொலிஸ் நிலையமொன்றிலிருந்து கிடைத்த செய்தியின்படி தவறியர் இரவு 7 மணியளவில் ஒரு கிலோவுக்கு மேற்பட்ட போதைவஸ்துடன் கைது செய்யப்பட்டு பாதுகாப்பாக அவரை கூட்டில் வைத்திருப்பதாக அச்செய்தி கூறியதாம்.

மாகாணசபைகளுக்கு பஜோரோ ஜீப்புகளை மட்டும் கொடுத்தால் போதுமா? சட்டம் இயற்றும் அதிகாரத்தையும் அல்லவா கொடுத்தல் நீதியானது. இதை ஒழுங்காக அரசு செய்திருந்தால் அதிகாரப் பரவலாக்களின் அற்புத சக்திகளை வெளிக்கொண்டுவர வாய்ப்பாக இருந்திருக்குமோ என்னவோ!

(ந.நி)

## உயிரைக் காக்க முனைந்து இறுதியில் பதவியிழந்தார்!

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது தெற்கில் ஆசிரியராக பணிபுரிந்தவர் ஒருவர் கிழக்கில் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெறும் சமயம் ஒரு நாள் இவர் தனது சொந்த வீட்டுக்கு சென்றிருந்த வேளை இந்திய அடிவருடி இயக்க உறுப்பினர் சிலரால் இலங்கை பொலிஸ் படைக்கு விண்ணப்பித்து இருந்த ஒருவரை கொலை செய்துவிட்டு அதே குழுவினர் பழைய தனிப்பட்டகுரோதமொன்றிற்காக இவரை கொலை செய்யும் நோக்கோடு இவரது வீட்டுக்கு தேடிச்சென்றுள்ளனர். இதையறிந்த இவ்விளைஞர் சமயோசிதமாக அயல் வீடொன்றுக்கு தப்பிச் சென்று மறுநாள் காலை கண்டி பயணமானாராம். இவர் தொடர்ச்சியாக பயிற்சி கலாசாலைக்கு சமூகம் கொடுக்க தவறியதனால் இவரது ஆசிரிய பதவியை இழந்ததாக அறிவித்தல் கிடைத்ததும் தேசிய அரசியல்வாதி ஒருவரின் உதவியை நாடி தலைநகருக்கு வந்து தனக்கு பயிற்சியும் வேண்டாம் கிழக்கு மாகாணமும் வேண்டாம் பழையபடி தெற்கில் ஆசிரிய பதவி கிடைத்தால்போதும் என்ற நிலையில் இழந்துபோன தனது ஆசிரிய பதவியை மீளப்பெற்று கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாராம்.

(ந.நி)

## அரக்கர்களின் அராஜகம்...

(1ம் பக்கத் தொடர்)

இளைஞர்களான மேகராஜா சிவானந்தாராஜா என்பவர்களே இவ்விதமாக மரணத்தை தழுவியவர்களாவர்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது, மேற்படி இளைஞர்கள் இருவரும் ஏற்கனவே 'டெலோ' இயக்கத்தால் கட்டாய பயிற்சிக்காக பிடிக்கப்பட்டு இவர்களின் உடல்நிலை காரணமாக அவர்களால் விடுவிக்கப்பட்டவர்களாம். வெவ்வேறு தினங்களில் நடைபெற்ற இச்சம்பவங்களில் மேகராஜா என்பவரை மீண்டும் பயிற்சிக்கு பிடித்துச்செல்ல டெலோ இயக்கத்தினர் அவரை தேடி சென்ற சமயம் மேகராஜா விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் கிருமிநாசினியை அருந்தி ஸ்தலத்திலேயே மாண்டாராம்.

இறுதியில் இவரை பிடித்துச்செல்ல வந்த வாகனமே இவரது சடலத்தை வைத்தியசாலைக்கு சுமந்து சென்றதாம்.

இதே போன்றே சிவானந்தராஜா என்ற இளைஞர் ஓர் வெற்றிலை தோட்டமொன்றுக்கு சென்று கொண்டிருக்கையில் டெலோ இயக்கத்தினரின் வாகனம் ஆள்பிடிக்க வந்ததை கேள்விப்பட்டு இவர்களிடம் அகப்படாது விவசாயத்துக்கு பயன்படுத்தும் கிருமிநாசினியை உட்கொண்ட சிறிதுநேரத்தில் மரணமடைந்ததாக கூறப்படுகிறது. இப்படியான அடாவடிகள் தானா தமிழர்களை பாதுகாக்க போகிறார்கள் என மக்கள் பரவலாக பேசிக்கொண்டனர் என தெரியவருகிறது.

(ந. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் ஏமாற்றுப் பேர்வழிகள்

**1984**ம் ஆண்டு வட-கிழக்கு மாகாணங்களில் உச்சக்கட்டத்தை அடைந்த தமிழ் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்த மோசடிப் பேர்வழிகளையும் ஒழித்துக்கட்டும் சம்பவங்களும் இடம் பெற்றது யாவரும் அறிந்ததே. கிழக்கு மாகாணத்தில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈழம் காணும் கெரில்லாக்கள் என்னும் நாமத்தில் இயங்கிய கொள்ளை கோஷ்டி ஒன்றும் தப்பவில்லை இக்கொள்ளைகோஷ்டியின் தலைவன் தங்கவடிவேல் உட்பட சீலன், சிறி என பலர் தீவிரவாதிகளின் தண்டனைக்கு உட்பட்டனர்.

இதே வரிசையில் பல மோசடிகள் தவறான நடத்தை கொண்டவரும் முற்று முழுதாக தனது சுய நலத்தை கருதி தன்னை தேசிய கட்சி ஒன்றில் இணைத்துக்கொண்டவருமான அரச உத்தியோகத்தர் ஒருவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டாராம். எதிர்பாராத விதமாகதீவிரவாதிகளின் தாக்குதலில் இருந்து தப்பித்து தலைநகரில் தஞ்சம் புகுந்தஅவர் தான் தேசியக்கட்சியின் ஆதரவாளர் என்ற காரணத்தால் தான் பாதிக்கப்பட்டவர் என கூறி அதிகாரத்தில் இருந்த கிழக்கின் தேசிய அரசியல் தலைவர் ஒருவரின் அனுதாபத்தையும் சம்பாதித்துக் கொண்டாராம். இவர் தலைநகரில் இருந்து கொண்டு அத்தேசிய தலைவரின் பெயரையும், தேசிய கட்சியின் பெயரையும்விற்றுதொழில் வியாபாரம் செய்து வந்தாராம். இவர் மட்டு மாவட்டத்தில் பல முகவர்களை நியமித்து தொழில்வாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி கிழக்கு இளைஞர்களிடமும் யுவதிகளிடமும் பெறும் தொகை 5 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரையாகுமாம் இத்தொகைகள் முன்பணமாகசெலுத்தப்படவேண்டுமாம். இதில் குறிப்பிடத்தக்க விசேஷம் என்னவெனின் தனக்கு செலுத்தும் லஞ்சப்பணத்தை எப்படி லஞ்சமாக அப்பாவி பொதுமக்களிடம் இருந்து மீளப்பெறுவது என விளக்கமும் கொடுத்து வைப்பாராம். உதாரணமாககிராம சேவையாளராக ஒருவர் நியமனம் பெற்றால் வெள்ளம், புயல் போன்றவைகளுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் சட்ட விரோத தொழில் புரிபவர்கள் நற்சாட்சி பத்திரம் கொடுப்பவர்கள் போன்றவற்றில் எப்படி வசூல் செய்யலாம் என வகுப்பும் நடாத்தி வைப்பாராம். இவர் பல லட்சக்கணக்கான ரூபாய்களை கிழக்கு மக்களிடமிருந்து வசூலித்துள்ள போதும், இரண்டு வருடங்களாகியும் பெரும்பான்மையான இளைஞர், யுவதிகளுக்கு இன்னமும் தொழில் பெற்றுக் கொடுக்க முடியாமல் போகவே நகையை அடைமானம் வைத்தும் நிலத்தை அடைமானம் வைத்தவர்களும் தமது பணத்துக்கு வட்டி வளருகின்றதே தவிர உத்தியோகம் கிடைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்து உரிய அரசியல் தலைவருக்கு புகார்களை அனுப்பிவைக்க ஆரம்பித்ததும் இவரின் தேசியப்பற்று முகமூடி கிழிந்ததாம். அத்துடன் தேசிய அரசியல்தலைவரின் வாசல் கதவு இவருக்கு மூடி விடப்பட்டதாம். இந்நிலை தனக்கேற்பட்டதும் தேசிய தலைவரை சந்திக்க செல்லும் கிழக்கை சேர்ந்தவர்களைப்பற்றி தவறான செய்திகளை தீவிரவாத இயக்கங்களுக்கு மொட்டை கடிதம் மூலம் தெரியப்படுத்தினர் என்றும் உண்மை அறியாத சில தீவிரவாத இளைஞர்களால் சிலர் தண்டனைக்குட்படுத்தப்பட்டார்கள் என்ற பேச்சும் அடிபடுகிறது. நாளடைவில் இம்மொட்டைக்கடிதங்களின் கதாநாயகன் இவர் என்பதை அறிந்த தீவிரவாத இளைஞர்கள் தமது தவறுகளுக்காக மனம் வருந்திய சம்பவங்களையும் சிலர் சுட்டிக் காட்டுகின்றனராம். இவ்வாறு பல வழிகளிலும் இவரது குட்டு வெளிக்கவே சிலயுவதிகளை வைத்து கைத்தொழில் கொந்தாராத்து வேலைகள் செய்து சம்பளம் வழங்கும் விடயத்தில் கடுமையான சுரண்டலை கையாளவே அதிலும் பல சிக்கல்களை எதிர்நோக்கிஞராம்.

இவ்வாறு பல தர்மசங்கடங்களைசந்தித்துக்கொண்டிருக்கும் இவரிடம் ஏற்கனவே இரண்டு மூன்று வருடங்களின்முன் தொழிலுக்காக கொடுத்து ஏமாந்துபோன இளைஞர்களும், யுவதிகளும் அவர்களின் பெற்றோர்களும் பணத்தை திருப்பி தரும்படி இக்கட்டுகளை உருவாக்கியதும் பல சாக்கு போக்குகளை சொல்லி ஏமாற்றி இறுதியில் சிறிது சிறிதாக கொடுத்து கழித்து வருகிறாராம். இவ்வாறு வழங்கப்படும் பணம் ஏற்கனவே பெற்ற தொகைகளுக்கு வங்கி வழங்கும் வட்டிப் பணமாம். ஏற்களவே இவ்வாறு பெற்ற தொகையை இவர் வங்கியில் நிரந்தர வைப்பு செய்துள்ளாராம். இவர் சிறிது சிறிதாக வழங்கும் தொகை பெறுபவர்களின் போக்குவரத்துச் செலவுகளிலும் ஏனைய செலவுகளிலுமே வீணாக்கப்பட்டுவிடுகிறதாம். மொத்தத்தில் பலரின் நகையும் நிலமும் மீட்க முடியாதனவாகிவிட்டதாம். மற்றவர்களின் பணத்தின் வட்டியில் அவர்களின் கடனையடைக்கும் புத்திசாலியான இவரைப்பற்றி அரச உயர்மட்டங்களுக்கு தெரிவித்து நிவாரணம் பெறும் முயற்சிகளும் திரைமறைவில் நடைபெறுகிறது என்ற பேச்சும் அடிபடுகின்றது. இந்த லட்சணத்தில் இவர் தேர்தலிலும் போட்டியிட தேசியக்கட்சி படி தொடக்கம் இயக்கங்களின் படிகட்டுகளிலும் ஏறி இறங்கிய போதும் சகல தரப்பும் இவரை நிராகரித்துவிட்டனர் என்றபேச்சும் தேர்தல் காலத்தில் பேசப்பட்டதாம். கிழக்கு மாகாணத்தில் தேசிய கட்சியின் படுதோல்விக்கு இவரின் மோசடிகளும் ஒரு காரணம் என பேசப்படுகிறது.

(ந. நீ.)

## இப்படியும் கொள்ளைகள் தாராளமாக நடக்கின்றன!

வட-கிழக்கு மாகாண சபை ஆளுங்கட்சி அதன் கூட்டணி கட்சிகளுமான ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கமும், ஈ.என்.டி.எல்.எப். இயக்கமும் ஜனநாயக வழிக்கு திரும்பிவிட்டோம் எனக் கூறிக்கொண்டு அன்னிய ராணுவத்தின் கால்களை இறுகப்பற்றிகொண்டு ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் ஆசனங்களைப்பெற்றுக் கொண்ட டெலோ இயக்கமும் வட-கிழக்கில் புலி வேட்டை நடாத்துவதாகக் கூறிக்கொண்டு வீடுவீடாக சோதனை போடுகிறார்களாம். இச்சந்தர்ப்பங்களில் இவ்வீடுகளில்காணப்படும் விலையுயர்ந்த டெலிவிசன், டெக், ரேடியோ, கமரா மற்றும் எலக்ரோனிக் பொருட்களையும் தம்முடன் எடுத்துச் செல்கின்றார்களாம். இதுபற்றிக் கருத்துத்தெரிவித்த சில பொது மக்கள் கிரிமினல் கொள்ளையர்களிடம் ஆட்சி அகப்பட்டதன் அபரீதமான விளைவுகள் எனக்கூறுகின்றனராம்.

## வல்வையில் நவீனமுறைப்படி தீ வைப்பு !

அண்மையில் வல்வையில் இடம் பெற்ற அகோரத் தாக்குதலின் போது அன்னிய அரக்கர் படைவிடுகளையும் கடைகளையும் சூரையாடிய பின்னர் ஒரு வகை இராசசயன தூள் ஒன்றை துவியே வீடுகளையும் கடைகளையும் தீப்பற்ற செய்தாராம் என சம்வத்தில் ஆகப்பட்ட பாதிக்கப்பட்ட அப்பாவி தமிழ்மக்கள் கூறுகின்றனர். இந்தியா தமிழழர்களுக்கு வழக்குகின்ற நவீன விஞ்ஞான பாதுகாப்பு இதுவும் ஒரு வகையை சேர்ந்தது என விரக்தியில் இருக்கும் அப்பாவி தமிழர்கள் கூறுகின்றனர். இவ் அனர்த்தங்களின் பின்னும் நான்கு அப்பாவி வல்வை தமிழர்கள் அன்னியப் படையினரால் சுட்டுக் கொள்ளப்பட்னனர் எனவும் அம்மக்கள் கூறுகின்றனர்.

## கருத்து சொன்னவரிடம் விளக்கம் கேட்கப்படுகிறது

இந்திய அமைதிபடையின் முதல் கட்ட வெளியேற்றத்தை தொடர்ந்து அதுபற்றி பலரும் தமது கருத்துக்களை வெளியிட்டனர். அந்த வகையில் வட-கிழக்கு மாகாண மக்களில் பெரும்பான்மை தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை பிரதிபலிக்க வேண்டிய பணியை அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் திகாமடுல்ல பா. உ. திரு. திவ்வியநாதன் தமது மக்களின் சார்பில் கருத்தை ரூபவாகினி மூலம் வெளிப்படுத்தினர். ரூபவாகினியில் தோன்றியதற்காகவும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளை வரவேற்றதற்காகவும் அவர் சார்ந்துள்ள டெலோ இயக்கம் அவரிடம் விளக்கம் கோரியுள்ளது.

இலங்கை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கலாம் இலங்கை அரசு வழங்கிய உல்லாச விடுதியில் வசிக்கலாம், இலங்கை அரசு வழங்கிய பஜோரா ஜீப்புகளில் குஷியாக சவாரி செய்யலாம், இலங்கை அரசு கொடுக்கும்மாதாந்த சம்பளத்தை பெறலாம், இலங்கை அரசு வழங்கும் அத்தனை சுகபோகங்களையும் ஒன்றுவிடாமல் அனுபவிக்கலாம். எல்லாவற்றுக்கு மேலாக இலங்கை அரசின் பாதுகாப்பை

(6ம் பக்கம் பார்க்க)

## இந்திய ஹெலியில் சென்ற சிறுபான்மையின தலைவருக்கு எதிர்மாறான வரவேற்பாம் !

இச்சுவையான சம்பவம் பற்றி தெரியவருவது அண்மையில் அக்கரை பற்றில் நடைபெற்ற கொடுரங்களை கண்டு களிக்க அண்மையில் சிறுபான்மையின கட்சியின் தலைவரொருவர் இந்திய ஹெலிவிமானத்தில் அக்கரைப்பற்றுக்கு சென்றிருக்கிறார் இவரது வருகையை அறிந்த சிறு பான்மையின பொது மக்கள் துரோகியே திரும்பிப்போ என கூச்சல்போட்டு பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினராம். இவ்வளவு விரைவாக தனது சுயநலத்தை அச்சிறுபான்மையின மக்கள் இனங்கண்டு கொண்டார்களே என அத் தலைவர் சிலையானாராம் ஒரு வழியாக அவரின் அன்புக்குரிய அன்னியபடை அவரை பாதுகாத்துக் கொண்டனராம். இச்சம்பவத்தை ரசித்துக் கொண்டிருந்த சிறுபான்மையின முதியவரொருவர் கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு தான் என கூறிசிரித்தாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உண்மை" ஆசிரியர் பேசுகிறார்

**என்** உயிர் வாசகப் பெருமக்களே! உங்களில் பலர் உண்மைக்கு வாழ்த்தியும் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் புழுதி வாரித்தூற்றியும் மடல்களை அனுப்பிவைத்துள்ளீர்கள். பெரும்பாலான வாசகர்கள் உண்மை இதழை பல வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகவும் எனது அற்ப சிவன் ஆபத்தின்றி வாழ வேண்டும் என இறைவனை பிரார்த்தனை பண்ணுவதாகவும் கூறியுள்ளீர்கள். உங்கள் பிரார்த்தனை பலிக்குமாயின் என் பணி தொடரும். உண்மை வெளியிடப்படுவதன் நோக்கம் குறித்து அறிய உங்களில் பலர் ஆவலாக உள்ளதை நான் உணர்ந்து கொண்டேன். எனவே என் நிலைப்பாட்டை உங்களின் மேலான கவனத்துக்குச் சுருக்கமாக சமர்ப்பிக்கின்றேன்.

நான் முதலில் இலங்கையன். இரண்டாவது தன்மானத்துடன் கூடிய சுயசிந்தனையுள்ள தமிழன். நான் பிறந்த மண்ணையும், என்னை பெற்ற தமிழ் சமூகத்தையும் எனது இரண்டு கண்களுமாகப் போற்றுபவன். இன்று எனது இரண்டு கண்களும் ஒளியிழந்து விடுமோ? எனவும் என்னை பெற்ற சமூகம் தன் துயரை கூறமுடியாது அன்னிய சக்திகளின் அடிவருடிகளால் அடிமைகளாக்கப்பட்டு விட்டது. நான் பிறந்த மண்ணை அன்னிய ஆக்கிரமிப்புக்கு ஆளாகி விடக்கூடிய அபாயத்தை எதிர்நோக்கி கொண்டிருக்கிறது. எமது பிரதேசம் நாளுக்கு நாள் பாலைவனமாக, சுடுகாடாக மாற்றமடைந்து வருகிறது. இந்த நிலையில் இருந்து எனது மண்ணையும், சமூகத்தையும் பாதுகாத்தே தீருவோம் என தீரமுடன் திடசங்கற்பம் பூண்டு அன்னிய ராணுவத்தினதும் அவர்களின் அடிவருடிகளான எம்மில் சில எட்டப்பர் கும்பலினதும் அரக்கத்தனத்துக்கு தமது செங்குருதியால் சொந்த மண்ணை குளிப்பாட்டி அனுதினமும் தமது இன்னுயிரை பலி கொடுத்து வெற்றி வாகை சூடிவரும் என்னுயிரிலும் மேலான தன்மானமிக்க எனது உடன்பிறப்புகளான தமிழ் ஈழ விடுதலை புலிகளினதும் மயிர் கூச்செறியும் வீர சாகச போரையும் அதற்கு ஈடு கொடுக்க முடியாத உலகின் நான்காவது படையினரும் அவர்களின் கைக்கூலி எட்டப்பர்களின் அட்டூழியங்களை கண்டு சுயசிந்தனையுள்ள தன்மானமுள்ள ஒருவன் தன் ஏக்க பெருமூச்சுக்களை எப்படி வேதனை கலந்த விரக்தியுடன் வெளியிடுவானோ அதேபோல் நான் எனது வேதனை கலந்த பெருமூச்சுக்களை என்னுயிர் வாசகர்களான உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் என்னை நான் சற்று திருப்திப்படுத்திக் கொள்கின்றேன். அதேவேளை அணு அணுவாக மரண அவஸ்தையில் வெந்தணலில் வீழ்ந்த புழுவாக துடித்துக் கொண்டிருக்கும் என் சொந்த உடன் பிறப்புகளின் வேதனைகள் உண்மை மூலம் வெளிவருவது கண்டு ஊமை நெஞ்சங்கள் உளமார வாழ்த்துவதை அறிந்து உண்மையில் என் மனம் குளிர்கிறது. இவைகளால் எனது நோக்கம் வெற்றி பெறுகிறது என்பதை உணர்ந்து திருப்தி கொள்கின்றேன்.

உண்மையின் உண்மை நிலை பல நெருக்கடிகள் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் எச்சரிக்கைகள் ஆகியவற்றுக்கு மத்தியில் பாரிய பொருளாதார நெருக்கடி இத்தனையையும் தாங்கி ஒரு சில உயர்ந்த உள்ளங்களின் உறுதியான ஒத்துழைப்புடன் வெளிவரும் உண்மை ஓர் ஏழை. அதன் உயரிய நோக்கம் உருப்பெற உங்கள் ஆதரவு தேவை, அது நிச்சயம் உண்மைக்கு உண்டு என்பதை உறுதியாக நம்புகின்றேன்.

வணக்கம்;

என்றும் உங்கள் நல்ஆதரவைநாடி நிற்கும்

உண்மை ஆசிரியர்

### விடுதலை புலிகளின் நாமத்தை பயன்படுத்தி அன்னிய அடிவருடிகளின் அரசியல் பழிவாங்கல்

# அப்பாவி இரு முஸ்லிம்கள் பலி

ஓட்டமாவடி பள்ளிவாசல் தலைவரின் மகனும் ஓட்டமாவடி மகா வித்தியாலய ஆசிரியருமான ஜனுப் சரிபு அலி என்பவர் இரவு 8.30 மணியளவில் மீராவோடையில் இருக்கும் தனது மனைவியின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் போயிருக்கிறார் இவர் மனைவி வீட்டை அடைந்து சிறிதுநேரத்தில் வீட்டின் கதவில் யாரோ இனந்தெரியாத நபர்கள் காக்கா, காக்கா என கூறி கதவில் தட்டியுள்ளனர். அவர் கதவை திறந்ததும் உங்களுடன் முக்கியமான ஓர் விடயம் கதைக்கவேண்டும் சற்று தம்முடன் கூட வரும்படி அழைத்துள்ளனர் அவரும் அவர்களுடன் கூட சென்றுள்ளார். அவர் சென்று சிறிது நேரத்தில் அவரது வீட்டுக்கு சற்று தொலைவில் சரமாரியாக துப்பாக்கி சத்தம் கேட்டதாம். துப்பாக்கி சத்தத்தை தொடர்ந்து அவரது உறவினர்கள் அவ்விடத்துக்கு விரைந்து பார்த்த பொழுது அங்கு யாரையும் காணவில்லை என கூறினராம். மறுநாள் காலை சுபகூ தொழுகைக்கு சென்றவர்கள் அவரது சடலத்தை கண்டு அவரது உறவினர்களுக்கு தகவல் கொடுத்துள்ளனர். அவரது சடலம் இருந்த இடத்துக்கு அருகாமையில் மரவியாபாரியான ஆதம்பாவா என்பவரின் சடலமும் கிடக்க காணப்பட்டதாம். இக்கொலைகளை விடுதலை புலிகளின் தலையில் சுமத்துவதில் ஏனைய இந்திய அடிவருடிகள் முயற்சித்த போதும் அப்பகுதி மக்கள் அக்கூற்றை ஏற்றுக்கொள்ளவில்லையாம்.

ஜனுப் சரிபுஅலி ஆசிரியர் தீவிர தேசியக்கட்சி ஒன்றின் ஆதரவாளர் என கூறப்படுகிறது. எது எவ்வாறுயினும் விடுதலை புலிகள் இவ்விடயத்தில் சிரத்தையெடுத்து உண்மையான குற்றவாளிகளைவிரைவில் கண்டுபிடித்து விடுவார்கள் என அப்பகுதி முஸ்லிம் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

முஸ்லிம் மக்களின் நன்மதிப்பை பெரும்பாலும் பெற்றுள்ள விடுதலை புலிகளை முஸ்லிம் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழக்க வைத்துவிடலாம் என பகல் கனவுகண்டு அன்னிய அடிவருடியான தீய அரசியல் சக்திகளின் சதி இது என்பதே முஸ்லிம் மக்கள் மத்தியில் இத்துர்பாக்கிய சம்பவம் பற்றிய கருத்தாக இருக்கிறது.

(நன்றி.)

# பட்ட பகலில் படு கொலை

இச் சம்பவம் நெல்லியடியில் இடம் பெற்றுள்ளது அன்னிய ஆக்கிரமிப்பு படைக்கு தகவல் கொடுத்தற்காக விடுதலை புலிகலின் மரண தண்டனைக்கு இலக்கான சங்குண்ணி முதலாளி என்பவரின் மரணத்தை தொடர்ந்து. நெல்லியடியில் பிரபல வியாபாரிகளான சோதி, மணியம் என அழைக்கப்படும் இரண்டு வியாபாரிகளை மாகாண சபை ஆளும்கட்சி ஈ. பி. ஆர். எல். எப். குண்டர்கள் விசாரணைக்கென காலை 9 மணியளவில் அழைத்து சென்று அன்னிய ஆக்கிரமிப்பு படையின் முகாமில் இருந்து நூறுயார்களுக்கு அப்பால் உடனடியாக சுட்டு படுகொலை செய்துள்ளனர். இக் கொடூர படுகொலையை எதிர்த்து அப்பகுதி மக்கள் இனிமேலும் இக் கொடுரங்களை பொறுக்க முடியாது எனக்கூறி அன்னிய படை முகாமுக்கு எதிராக தமது இன்னுயிரை பணயம் வைத்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர் மக்களின் எழுச்சியையும் அவர்களின் ஒற்றுமையும் கண்ட அன்னிய படை நிலை குலைந்து பழியை புலிகளின் தலையில் சுமத்தியுள்ளனர் ஆனாலும் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளாது தமது பூரண எதிர்ப்பை ஆர்ப்பாட்டத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

(ந.நி)

# சிட்டையில் வந்தவரால் தேசியத்துக்கு ஆபத்தாம்

தேசியக்கட்சி ஒன்றின் சிட்டையில் பாராளுமன்ற உறுப்பினராக அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் சிறுபான்மை இனத்தவர் ஒருவர் தனது மாவட்டத்துக்கு பக்கத்து மாவட்ட விடயங்களில் தேசியக்கட்சியின் வளர்ச்சிக்கு விரோதமானமுறையில் கறுப்பு கொடி வெளிநடப்பு இனவாத கட்சி, மிதவாத கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறாராம். இவரின் இவ்வாறான நடவடிக்கைகளால் தேசியக் கட்சியின் முக்கிய பதவி வகிக்கும் அவரது பக்கத்து மாவட்ட சிறுபான்மை இன இளம் அரசியல்வாதி ஒருவர் பல நெருக்கடிகளின் மத்தியிலேயே தனது பணிகளை அம்மாவட்ட மக்களுக்கு செய்து முடிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளாராம் என பரவலாக அம்மாவட்ட மக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். பெரும்பான்மை இனத்தை சேர்ந்த அமைச்சர்கள் மேற்படி இளம் அரசியல் வாதிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகையில் இச்சிட்டை அரசியல்வாதி மட்டும் தனக்கு பல தொல்லைகளை கொடுத்து வருகிறாரே என அவ் இளம் அரசியல்வாதி தம் ஆதரவாளர்களிடம் மனம் புழுங்கிறாராம். சிட்டை உறுப்பினர் தொடர்ந்தும் தொல்லை கொடுத்தால் விபரங்களை பெரியவருக்கு தெரியப்படுத்தும்படி அப்பகுதி தேசியக்கட்சி ஆதரவாளர்கள் ஆக்ரோஷமாக கூறுகின்றனராம் எனவும் அறியக்கூடியதாக உள்ளது. பெரும்பான்மை இன அமைச்சர்களை எவரும் எப்போதும் சந்திக்கக்கூடியதாக இருக்கையில் அதிகா

# புலி என நினைத்து பூனைக்கு வெடி

இச் சுவையான சம்பவம் கரவெட்டி கிராமத்தில் நடந்துள்ளது. புலிவேட்டைக்கு என அன்னிய அரக்கர் படையும் அவர்களின் அடி வருடிகளான மாகாண சபை ஆளும்கட்சியா ஈ. பி. ஆர். எல். எப். தோலர்கள் சிலரும் சென்றுள்ளனர். இவர்கள் புலியை தேடிக் கொண்டிருக்கையில் ஏதோ சலசலப்பு கேட்கவே ஈ. பி. ஆர். எல். எப் தோலர் ஒருவர் திடீரென வைத்த துப்பாக்கி வெடிக்கு புலியை தேடிக்கொண்டிருந்த சக தோலர் ஒருவரின் கால் சேதப்படுத்தப்பட்டது. இறுதியில் புலிவேட்டையை கைவிட்டு காயப்பட்ட பூனையை கிகிச்சைக்காக தூக்கிச் சென்றனர். குருடனுக்கு குருடன் வழிகாட்டிய கதைதான் என சில முதியவர் இச்சம்பவத்தை வர்ணித்தார்கள்.

(ந.நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட - கிழக்கில் பாடசாலைகள் திறப்பதற்கு எதிர்ப்பு!

வட-கிழக்கு மாகாண சபை முதலமைச்சரும், கல்வியமைச்சருமான திரு. அ. வரதராஜப் பெருமாள் அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகளை ஆரம்பிக்குமாறு ஒலிபெருக்கிமூலம் உத்தரவுகளை பிறப்பித்துள்ளாராம். மாகாணசபையின் இவ் உத்தரவை அடுத்து இம்மாவட்டத்திலுள்ள பல கிராமங்களில் மாகாணசபையின் மேற்படி உத்தரவுக்கு எதிராக கண்டனச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளது. கீழ்க்காணும் வாசகங்களை அச்சுவரொட்டிகள் சுமந்திருக்கின்றன.

''மாகாண அரசே பாடசாலைகளை ஆரம்பித்து மாணவர்களை மீண்டும் பிடிக்கப்போகிருயா?''

''மாணவர்களுக்கான பரீட்சைகளை அமைதியான சூழ்நிலையில் நடாத்து''

இவ்வாருன சுவரொட்டிகள் பரவலாகக் காணப்படுகிறது. மாகாண அரசின் அராஜகங்களுக்கெதிராக மக்கள் அணிதிரள்வதின் முதற்படி என புத்திஜீவிகள் மத்தியில் கருத்து நிலவுகின்றது.

# அதிகார பரவலாக்கலுக்கு தகுந்த நேரம் இதுவல்ல!

**1987**ம் ஆண்டு ஜூலை மாதம் கைச்சாத்திடப்பட்ட இலங்கை—இந்திய உடன்படிக்கைக்கமைய அதிகார பரவலாக்கலுக்குக் கீழ் முழு இலங்கைத் தீவிலும் 8 மாகாண சபைகள் அமைக்கப்பட்டு அவற்றில் ஏழு மாகபணசபைகள் தமது பணிகளை மிகு சிறப்பாக ஆற்றியும் வருகின்றன. அவை தம்மை அலட்டிக்கொள்ளாது மத்திய அரசுடன் கலந்தாலோசித்து வெகு கச்சிதமாக செயற்பட்டு வருவதும் கண்கூடு. ஆனல் இந்த 8வது மாகாணசபை மட்டும் அன்னிய ஆக்கிரமிப்பு நோக்ாம் கொண்ட பிராந்திய நலனை பாதுகாத்துக்கொள்ளும் அன்னிய நாட்டின் நலன்களிலேயே தனது கரிசனையை செலுத்துகிறதே தவிர வட-கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற மக்களின் வளமான வாழ்வுக்காக எதையும் செய்வதாகவோ அறிகுறிகள் எதையும் காண முடியவில்லை. மாருக சொந்த மண்ணுக்கு எதிராக அந்த மண்ணின் மைந்தர்களை அன்னிய நாட்டின் ஆக்கிரமிப்பு ராணுவ நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதிலேயே குறியாக இருக்கிருர்கள். இதன் வெளிப்பாடுகள்தான் மாகாணசபைக்கு போதிய அதிகாரங்கள் தரப்படவில்லை. சட்டம், நீதி, பாதுகாப்பு போன்றவைகள் முழுமையாகத் தமீது கரங்களில் ஒப்படைக்கப்படவேண்டும் என்கின்ற கூப்பாடும் அழையா விருந்தாளியான இந்தியா வட-கிழக்கு மாகாணசபைக்கு அனைத்து அதிர்ாரங்களும் வழங்கப்பட்டு 6 மாத காலம் அதை தான் மேற்பார்வை செய்து திருப்திபட்டால் மட்டுமே கட்டம் கட்டமாக தனது படை வாபஸ் பெறப்படும் என்ற நிபந்தனையும்,

மாகாணசபைளுக்கு அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதற்கு மாற்று கருத்து இருக்க முடியாது. இதே கோரிக்கையை ஏனைய ஏழு மாகாண சபைகளும் முள்வைத்திருப்பதும் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தமானது. ஆனல் வட-கிழக்கு மாகாண சபை நிர்வாகம் அன்னி ஆக்கிரமிப்பு சக்திகளின் அடிவருடிகளாக அவர்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்றும் நிலையில் இருக்கின்ற இவ்வேளையில் அது சாத்தியப்பட முடியாதது என்பதை அரசியல் தெளிவுள்ள எவரும் ஏற்றுக்கொள்ளத்தான் செய்வார்கள்.

அதற்கு ஏற்புடைய வகையில் இந்தி உளவுப்படையால் திட்டமிடப்பட்டு ஜனநாயக தேர்தல் வரம்பு முறைகளுக்கு அப்பாற்பட்டு தமது கைக்கூலிகளை வட-கிழக்கு மாகாணசபையில் அரியாசனம் ஏற்றி வைத்துள்ளார்கள் என்பதையும் நாம் ஒதுக்கிவிட முடியாது. அவர்களும் முற்றுமுழுதாக உளவுப்படையின் உத்தரவுகளை செயல்படுத்தி வருகிருர்கள் என்பதையும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இவர்களின் நிலைப்பாடு எமது தாய் நாட்டின் பாதுகாப்புக்கும், இறைமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், இனங்களுக்கிடையிலான இன ஐக்கியத்திற்கும் ஆபத்தான தேசத்துரோகம் எனக் கூறின் அது தவருகாது.

இந்நிலையில் சட்டம், நிதி, பாதுகாப்பு ஆகிய முக்கிய மூன்று பொறுப்புக்களையும் மாகாண சபையிடம் கையளிக்க முடியாததொன்று என்பதை புத்திஜீவிகள் எவரும் மறுக்கமாட்டார்கள். சட்டம் நிதி, பாதுகாப்பு இவை தற்சமயம் உள்ள மாகாணசபை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டால் வட-கிழக்கு மாகாணம் சைப்பிரசை போன்ற யுத்தகளமாக மாறிவிடும் ஆபத்து நிச்சயம் உண்டு. இதை நிரூபிக்கக்கூடிய வகையில் தற்சமயம் வட-கிழக்கு மாகாணங்களில் தமிழர் பாதுகாப்புப்படை என்ற போாவையில் அன்னிய ராணுவத்துக்கு துணையாக கட்டாய ராணுவப் பயிற்சிக்கு தமிழ் இளைஞர்கள் பலாத்காரமாக திரட்டப்படுதல் மற்றும் கொடிய கிரிமினல்களுக்கு பாதுகாப்புப்படையில் முதலிடம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

அன்னிய ஆக்கிரமிப்பு ராணுவம் எமது மண்ணை விட்டு வெளியேறும்வரை மாகாணசபைகளுக்கு அளவுக்கதிகமான அதிகாரங்கள் வழங்கும் நடவடிக்கைபற்றி ஆலோசிக்கவே கூடாது.

(ஆ-ர்)

## கேள்வி பதில்

வீரசிங்கம்
களுவாஞ்சிகுடி

கே:- விடுதலை புலிகள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்த எடுத்த முடிவு சரிதானு?

ப: விடுதலை புலிகளின் முடிவு சரியானதே.

என். சங்கர்
முதலைக்குடா.

கே: இந்திய படை விலகல் பற்றி ஈரோஸ் திடமான அறிக்கைகள் விடாது மௌனம் சாதிப்பதேன்?

ப: ஈரோஸ் எப்பொழுதும் மதில்மேல் பூனையாக இருந்து வெற்றியின் பக்கம் சேர்ந்து கொள்ளும் கொள்கை கொண்டது என்பதை இவ்விடத்திலும் நிரூபித்து கொண்டிருக்கிருர்கள் பொதுவாக சந்தர்ப்பவாதிகள். இதை கடந்த தேர்தலிலும் நிருபிக்க தவறவில்லை,

வசந்தராசா
நல்லூர்.

கே: திரு. அ. அமிர்தலிங்கம் தான் தமது தலைவர் என டெலோ பா. உ. கூறியது பற்றி?

ப: இதில் என்ன ஆச்சரியம், கல்முனை, சம்மாந்துறை எரிந்த போதே இந்த உண்மை வெளிப்பட்டுவிட்டதே.

ம. சாந்தன்
மன்னர்.

கே: சந்தர்ப்பவாதிகளுக்கு ஓர் சிறந்த உதாரணம் கூறுக?

ப: பூ இது என்ன பெரிய விடயம் ''ஈரோஸ்'' எல்லோரும் அறிந்த சந்தர்ப்பவாதிகள் தானே.

கு. மன்மதன்
வவுனியா.

கே: த. வி. கூ. தலைவர்களின் சடலங்களை சுற்றுலா கொண்டு திரிந்த வட-கிழக்கு மாகாணசபையின் நடவடிக்கைகள் பற்றி?

ப: குருவை மிஞ்சிய சீடர்கள். பல மாங்காய்களுக்கு குறிபாத்து வீசியகல் இறுதியில் ஒரு மாங்காயும் விழவில்லை பாவம்.

ந. தங்கவேல்.
மன்னர்.

கே: உண்மை ஒரு பக்கச் சார்பான பத்திரிகை என நான் கூறுகின்றேன் உமது பதில் என்ன?

ப: உமது கூற்று சரியானதே. உண்மை உண்மையின் பக்க சார்பானதே.

கே: கந்தசாமி
பரந்தன்.

கே: வட-கிழக்கு மாகாணங்களின் எதிர்காலம் எப்படி அமையும்?

ப: போகிற போக்கை பார்த்தால் எதியோப்பியா தான்.

வே. நந்தன்
கல்முனை.

கே: எட்டப்பருக்கு ஓர் அண்மைய உதாரணம் கூறுக?

ப: இதில் ஏன் சந்தேகம் வேண்டி கிடக்கிறது இந்திய கைக்கூலி இயக்கங்கள் தான்.

ஆர். ஜோசப்.
மட்டக்களப்பு.

கே: உண்மை ஆசிரியர் ஒரு பட்டதாரியா?

ப: பண்பும் தேசாபிமானமும் கலந்த முதிய அரசியல்வாதியின் சீடர்.

கு. மகேஸ்வரன்
ஆரையம்பதி.

கே: நீர் தமிழுக்கு தொண்டு செய்தால் என்ன?

ப: என்னைப் பொறுத்த வரையில் தமிழுக்கு இன்னமும் தொண்டு செய்ய வேண்டிய அளவுக்கு முடக்குவாதம் வர இல்லை.

ந. மனேகரன்.
களுவாஞ்சிகுடி.

கே: எதிர்வரும் இந்திய பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும்?

வட-கிழக்கு மாகாண சபை தேர்தலை போல் நடாத்தப்பட்டால் ராஜிவின் கட்சி மூன்றில் இரண்டரை பங்கு பெரும்பான்மையை பெறும் இந்திய எதிர்கட்சிகளின் கோஷ்டி மோதல்கள் நிலைத்தாலும் ராஜீவ் தான் பிரதமர்

கே: ராஜீவ் கட்சி எதிர்வரும் இந்திய தேர்தலில் தோல்விகண்டால்?

ப: வட-கிழக்கு முதல்வர் காசியாத்திரை போக வேண்டியது தான்.

ச. குமரகுரு.
திருமலை.

கே: வரதர் முதல்வரானது பற்றி?

ப: மக்களால் தெரிவு செய்யப்படாத முதல்வர் இந்தியாவுக்கு ஏற்ற ஒருவர்

சு. சந்திராவதி.
பம்பலப்பிட்டி.

கே: லஞ்சம் பற்றி ஒரு வரி?

ப: பலரின் பணத்தை பறித்து சிலர் கோடீஸ்வரர் ஆவது;

## புலி வேட்டை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வேளையில் எம்மை பாதுகாக்கும் பொறுப்பையும் அவர்களே ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். தற்சமயம் தமிழர்களை இந்திய இராணுவத்திடமும் அவர்களின் கைக்கூலிகளிடமும் இருந்தே பாதுகாக்க வேண்டியது அவசியம்.

எனவே விடுதலைப் புலிகள்-அரசு பேச்சுவார்த்தையை இனிமேலும் காலம் தாழ்த்தாது விரைவானதும் இனக்கமானதுமான தீர்வொன்றை ஏற்படுத்தி எமது நாட்டின் பொது எதிரியான அன்னிய ராணுவத்தையும் அவர்களின் அரவணைப்பில் சுகம் காணும் சுயநல இயக்கங்களின் அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி இடவேண்டியது அவசியமாகிவிட்டது.

இன்னமும் காலம் தாழ்த்தின் ஆக்கிரமிப்புக்கு எதிரான தென்னிலங்கை தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் உச்சக் கட்டத்தை அடையக்கூடிய ஆபத்துக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்ருகிவிடும். இவ்வாருன நெருக்கடிகளினுல் எமதுநாடு பொருளாதார ரீதியாக பாதிப்படைந்து நமது எதிர்கால சந்ததியின் வாழ்வு சூனியமாக்கப்பட்டுவிடும். (ஆ.ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் கட்சியின் அரக்கத்தனம்
# அரச ஊழியர்கள் தாக்கப்படுகின்றனர்

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, மட்டக்களப்பு தலைமை உதவி அரச அதிபர் மாகாணசபை ஆளுங்கட்சி கூட்டணி இயக்கம் ஒன்றின் கட்டளைகளுக்கு செவிசாய்க்காது சட்டப்படி பாரபட்சமின்றி சேவை புரிபவர் என கூறப்படுகின்றது. இவரை ஈ.என்.டி.எல்.எப். இயக்கம் தனது காரியாலயத்திற்கு வரும்படி அழைத்துச் சென்று மிருகத்தனமாக தாககினராம். இச்சம்பவத்தை தொடர்ந்து மறு நாள் கச்சேரி ஊழியர்கள் பலரும் உயர் அதிகாரிகளும் வேலைக்கு சமூகம் அளிக்காததை தொடர்ந்து கச்சேரி வேலைகள் அனைத்தும் தடைப்பட்டதாம். இதை அறிந்த மாகாண சபை ஆளும் கட்சியினர் ஊழியர்களானதும் அதிகாரிகளினதும் இல்லங்களுக்கு சென்று அவர்களை அழைத்து வந்து சமாதான பேச்சு வார்த்தைகள் நடாத்தி நடந்த சமபவத்துக்கு சம்பந்தபட்டவர்கள் மன்னிப்பு கோரி மீண்டும் கச்சேரியை இயங்க வைத்த போதும், இந்த அத்து மீறிய செயலல் சம்பந்தப்பட்ட கிரிமினல் குற்றவாளிகளுக்கெதிராக எவ்வித மான சட்ட நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என தெரிய வருகிறது.

மட்டுநகரில் நடைபெற்றது போன்ற ஓர் சம்பவம் சிங்கள பகுதிகளில் உள்ள காரியாலயங்களின் எந்த இன அதிகாரிக்கோ அல்லது சிற்றூழியருக்கோ நடைபெற்றிருக்குமாயின் சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கெதிரான சட்ட நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டிருக்கும் என்பது இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம். ஆனால் இ சம்பவத்தில் வட-கிழக்கு மாகாணசபை ஆளுங்கட்சி கூட்டணி இயக்கம் சம்பந்தப்பட்டபடியால் கண்துடைப்புகளுடன் காட்டிய அச்சுறுத்தல்கள்மூலம் விடயத்தை முடிவுக்கு கொண்டு வந்துவிட்டனர்.

இதே போன்று ஓர் சம்பவம் சில மாதங்களுக்கு முன்னர் திருமலை நகரசபை மின் பொறியியல் துறை அதிகாரியொருவருக்கும் ஏற்பட்டது. நியமன சட்ட ஒழுங்கு விதிகளை மீறி 'டெலோ' இயக்க உறுப்பினர் ஒருவரின் உறவினருக்கு நிரந்தர நியமனம் வழங்க தவறிய காரணத்தால்தான் அவ்வதிகாரி டெலோ அங்கத்தவர்களால் மிக மோசமானமுறையில் தாக்கப்பட்டு அவசர சிகிச்சைக்காக விமானம் மூலம் அனுராதபுர அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். இச்சம்பவத்தில்கூட கிரிமினல் குற்றவாளிகளை கைதுசெய்யவோ அல்லது அவர்களுக்கெதிரான எந்த நடவடிக்கையும் மேற்கொண்டதாக தெரியவில்லை. இவ்வாறான அரக்கத்தனமான நடவடிக்கைகளை தமிழர் பாதுகாப்பு எனக்கூறும் இந்தியஅமைதி படை மேலும் மேலும் தட்டிக்கொடுக்கிறதேயொழிய தடுத்து நிறுத்துகிறபாடாக இல்லை. ஜனநாயகம்பிறந்த நாடு எனக்கூறுகின்ற இந்திய நாட்டு ஜனநாயகம் இப்படிப்பட்டது தானோ என்னவோ.

எது எவ்வாறாயினும் 1-8-89ம் திகதி 'உண்மை' இதழில் வெளியிட்ட மாகாண பொலிஸ் படையும் தற்போதைய மாகாண சபை நிர்வாகத்தின் பிடிவாதமும் என்ற தலைப்பில் வெளியிட்ட கருத்து நிருபிக்கப்பட்டு விட்டது.

திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் நடைபெற்றது போன்ற சம்பவம் போல் தென்இலங்கையில் எப்பகுதியிலாவது ஒரு தமிழ் அதிகாரிக்கோ சிங்கள அதிகாரிக்கோ அல்லது சிற்றூழியர் ஒருவருக்காவது நடைபெற்றிருப்பின் சம்பந்தப்பட்டவன் எந்த இனத்தை சார்ந்தவனாக இருந்தாலும் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட்டே தீருவான், ஆனால் வட-கிழக்கு மாகாணங்களில் நிலைமை முற்றிலும் எதிர் மாறாகவே இருந்து வருகிறது: இந்த லட்சணத்தில்தான் ஆளுங்கட்சிக்கு இன்னமும் அதிகாரங்கள் வேண்டுமாம்.

(ஆ-ர்)

---

## கருத்து...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்து பெறலாம். இவையெல்லாம் நியாயம் ரூபவாகினியில் பேட்டி கொடுத்ததுதான் குற்றமாம். தன்மானமற்றவர்களெல்லாம் விளக்கம் கேட்கின்ற அளவிற்கு வட-கிழக்கு மக்களின் அரசியல் தரம் தாழ்ந்து விட்டதே என சில தலைநகர் தமிழர்கள் அங்கலாய்த்தனர்.

(ந. நி.)

---

## சிட்டையில் வந்தவரா...

(3ம் பக்கம் பார்க்க)

ரத்தில் இருக்கும் மேற்படி அரசியல்வாதி சிறுபான்மை இனத்தவர்களின் முக்கிய பிரதிநிதிகளில் தான் விரும்பியவர்களை மட்டுமே சந்திக்கிறார் எனவும் பெரும் குறைகள் கூறப்படுகின்றது. இவ்வாறு குறை கூறுபவர்கள் பெரும்பாலும் தேசியக் கட்சி தீவிர ஆதரவாளர்களாகவே இருக்கின்றார்கள்.

சிட்டை பா. உ. புறக்கணிக்கப்பட்டுவரும் தேசிய கட்சிக்காக முன்னின்று உழைத்த ஒருவர் இவர் பற்றி கூறுகையில் இச்சிட்டை உறுப்பினர் பொது தேர்தலில் குதித்திருந்தால் தேசியக்கட்சி ஏனைய வேட்பாளர்களுக்கு சிறுபான்மை மக்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பே இவருக்கும் கிடைத்திருக்கும் என்பதை மறந்து அலட்டுகிறாரே எனவும் முன்னைய மந்திரி சபையில் சிறுபான்மையினத்தவரை பிரதிநிதிபடுத்திய கிழக்கின் சிரேஷ்ட அமைச்சர்ஒருவரின் இவ்வாறான நடவடிக்கைகளால் அவர் இம்முறைபடு தோல்வி அடைந்ததை சுட்டிக்காட்டியதுடன் இதேநிலையை தற்போதைய சிட்டை பா. உ. தவறாது சந்திக்க வேண்டியதுதான்; இவர் போன்றவர்களின் நடவடிக்கைகள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் இருப்பதாக பல தேசியக்கட்சி ஆதரவாளர்கள் குறிப்பிட்டனர். இவ்வாறான நடவடிக்கைகளே தேசியக்கட்சிகள் சிறுபான்மையினத்தவரிடம் இருந்து வெறுப்புகளை சம்பாதிப்பதற்கு ஏதுவாக உள்ளது என்பதை தேசியக்கட்சிகளின் தலைமைகள் இனங்கண்டு கொள்ளவேண்டும் என பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

---

### பல் மருத்துவ பீட மாணவன்

# நீதிநாதன் கொலை வழக்கு உணர்த்தும் உண்மைகள்

1983ம் ஆண்டு வட-கிழக்கு மாகாணங்களில் உச்சக்கட்டத்தை அடைந்த தமிழ் தீவிரவாத இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமானதும் மனிதாபிமானத்துக்கு அப்பரற்பட்டதெனவும் வர்ணிக்கப்பட்ட ராணுவ நடவடிக்கைகளும் அதற்கேற்புடையதாக உருவாக்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் வெகு தீவிரமாக அமுல்படுத்தப்பட்ட காலங்களில்கூட ஒரு தனி மனிதனுடைய மரணத்துக்கு சட்டத்தின் முன்னுல் வகை சொல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது இவ்வாறான கடைபபாடுடைய எந்த அதிகாரியையும் நீதி மன்றத்திற்கு அழைத்து நீதி கேட்கும் உரிமை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இருந்தது. 1987ம் ஆண்டு ஜூலை மாதம் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை தொடர்ந்து தமிழர்களை பாதுகாத்து அமைதியை ஏற்படுத்த என கூறிக்கொண்டு இலங்கை மண்ணில் காலடி வைத்த இந்திய படையின் வருகையை தொடர்ந்து எமது மண்ணை ஆக்கிரமிக்கும் இந்தியாவின் கபடம் சரியாக இனங்கண்டுகொண்ட விடுதலை புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளால் விடுதலை புலிகள் எமது மண்ணை அன்னிய ஆக்கிரமிப்பில் இருந்து மீட்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்டதன் பயனாக அன்னிய ஆக்கிரமிப்பு படைக்கு எதிரான தமது யுத்தத்தை ஆரம்பித்தனர். விடுதலை புலிகளுக்கு ஈடு கொடுக்க முடியாத இந்திய ராணுவம், சோரம் போனவர்களும் மக்கள் விரோத நடவடிக்கைகளில் பிரசித்தமானவர்களுமான சிலசமூக விரோத கும்பல்களை தம்முடன் இணைத்து தமது ஆற்றாண்மையை அப்பாவி தமிழ்பேசும் மக்களையும் தமிழ்பேசும் இளைஞர்களையும் விடுதலை புலிகளின் நாமத்தை சூட்டி கொன்று குவித்து வருகின்றனர். அதேவேளை தமது மக்கள் விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்த ஏற்புடையதாக தமது கைக்கூலிகளானவர்களும் தமிழர் போராட்ட களத்தில் குறிப்பிடத்தக்க எந்த சாதனைகளையும் செய்து முடிக்கும் திராணியற்றவர்களை ஜனநாயகம் என்ற போர்வையில் முற்றிலும் ஜனநாயக விரோதமாக எட்டப்பர் கூட்டத்துக்கு முடிசூட்டு விழாக்களையும் நடாத்தி பதவி என்னும் காய்ந்து போன சிலஎலும்புத்துண்டுகளை கொடுத்து அன்னிய ராணுவம் தமது கொடூரங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

தமிழ்பேசும் மக்களின் சொந்த மண்ணில் அன்னிய ஆக்கிரமிப்பு ராணுவமும் அவர்களின் அடிவருடிகளும் தாம் சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற ஓர் நிலையை தோற்றுவித்து வட-கிழக்கு மாகாணதமிழ் பேசும் அப்பாவி மக்களையும்; இளைஞர்களையும் எது விதமான காரணமுமின்றி சந்தேகத்தில் படுகொலை செய்யப்படுகிறார்கள். இப்படியாக படுகொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான அப்பாவி உயிர்களின் மரணம் அரக்கத்தனமான கொலைகளே என்பதை வெளி உலகுக்கு திரு. நீதிநாதனின்கொலை உணர்த்தி விட ஏற்புடையதாகி விட்டது. இனி இவ்வளவுக்கு வெளிப்படுத்தி உள்ள உண்மைகளை நாம் சற்று யதார்த்தபூர்வமாக ஆராய்வோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோரம்போன இயக்கங்கள் சோசலிசம் பேசுகின்றன

## மலையக மக்களே உஷாராகுங்கள்!

1983ம் ஆண்டு ஆயுதப் போராட்டமாக உருவெடுத்த இலங்கைப் பிரச்சினையை தொடர்ந்து தமிழர் போராட்டத்தின் சாபக்கேடாக பல உதிரிக்குழுக்கள் போராட்ட களத்தில் உதிக்கத்தொடங்கியது, இவை ஒவ்வொன்றும் தனிப்பட்ட சிலரின் பதவிமோகத்தால் ஏற்பட்ட கேவலங்கள் எனக்கூறின் அது மிகையாகாது.

இவ்விதமான கேவலங்களின் நாயகர்கள் தம்மை நியாயப்படுத்திக் கொள்வதற்காகவும் தமது அரசியல் பங்ரோத்து தனத்தை சரி செய்து கொள்ளும் முகமாகவும் மாக்சிசம், சோசலிசம் என்ற போர்வைகளால் தம்மை போர்த்திக் கொண்டனர். இவ்வாறு உருவாகிய 'இயக்கங்கள் தமிழர் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்புக்கள் எதனையும் சாதித்தார்கள் எனக்கூறுவதற்கு எதுவும் இல்லை. இவ்வாறு உருவாகிய கேவலங்களால் ஏற்பட்ட இயக்க மோதல்களால் தமிழர் விடுதலைப் போராட்டம் என்ற இலக்கு உருமாறியது. இச்சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திய இந்தியா அடாவடித்தனங்களின் உச்சக்கட்டத்தில் இருந்து விடுதலைப்புலிகளால் கீழே தள்ளப்பட்ட ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தை தனது முழுமையான கையாக்களாக்கி தோல்வி கண்டது ஒப்பந்தத்திற்கு புத்துயிர் ஊட்டுமுகமாக மாகாணசபை என்னும் ஒரு நாடகததை நடாத்தி தமது ஏஜண்டுகளாக நியமித்துத்தான் தாமதம் அவர்கள் பழையபடி தமது சோசலிசம், மாக்சிசம் எனும் நாமங்களை உச்சரித்துக் கொண்டு தென் இலங்கையில் சோம்பிப்போன சில சோசலிச வாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டதுடன் தம்மையும் தூய்மையான சோசலிச வாதிகள், பாட்டாளி, விவசாயிகளின் ஏகபோக பிரதிநிதிகள் நாம்தான் என பறைசாற்ற முனைவதுடன் இனரீதியாக தொழிலாளர்களை பிரித்து வைக்கும் முயற்சியில் மிகத் தீவிரமாக செயல்படுகிறார்கள். இவ்வாறான விஷக்கிருமிகள் தற்சமயம் மலையக மக்களின் அமைதியான வாழ்வை சீர்குலைத்துவிடக் கூடிய அபாயங்கள் ஆரம்க்கப்பட்டிருக்கும் இக்காலகட்டத்தில் இவ்வாறான தீயசக்திகளை மலையக மக்களுக்கு இனங்காட்டி வைக்கவேண்டியது அவசியமாகிறது. எனவே தான் சீனாவின் மகத்தான மக்கள் புரட்சியின் தந்தை மாவோ சேதும் தனது தோழர்களுக்கு கூறிவைத்த அறிவுரைகளை இங்கு சுட்டிக் காட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மாவோ சேதுங் புகட்டிய அறிவுரைகளுக்கு அமையவே போராளிகள் செயற்பட்டு அப்புரட்சியில் வெற்றி பெற்றனர். தன்னலமற்ற உண்மையான அப்போராளிகளின் தூய நோக்கமே அப்புரட்சியை வெற்றிபெற வைத்தது எனக்கூறின் அது மிகையாகாது. மாவோ சேதுங் கூறிய அப்பொன்னான கட்டளைகள் பின்வருமாறு அமைந்திருந்தது.

1. கைதிகளை துன்புறுத்தாதே.

2. மக்களிடம் இருந்து ஒரு ஊசியையோ, ஒரு நூல் துண்டையோ எடுக்காதே.

3. சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்கு.

4. பெண்களிட்டம் ஒழுங்கீனமாக நடவாதே.

5. கைப்பற்றியவை சகலவற்றையும் தலைமையிடம் ஒப்படை.

6. அப்பாவி பொதுமக்களை துன்புறுத்தாதே.

7. வாங்குவதிலும், விற்பதிலும் நியாயமாக நடந்து கொள்.

8. சகலவற்றிலும் கட்டளைகளுக்கு கீழ்ப்படி.

9. மரியாதையாகப்பேசு

10. விளிப்புடனும், நிதானத்துடனும் செயற்படுங்கள்.

இவற்றில் ஒன்றைத்தானும் இன்று சோசலிசம் போகும் தமிழ் இயக்கங்கள் நடைமுறையில் கடைப்பிடித்தனரா? அல்லது கடைப்பிடிக்கிறார்களா? என்றால் என்ன பதில் கூற முடியும் என்பது சொல்லித் தெரியவேண்டிய தொன்றல்ல. இதை ஏன் கூறுகிறோம் என்றால் இன்று தொழிலாளர், பாட்டாளி மக்கள் மத்தியில் குறிப்பாக மலையகத்தில் உருவெடுக்க ஆரம்பித்திருக்கும் இப்புல்லுரிவிகளின் பசப்புவார்த்தைகளிலும், முலைக்கண்ணீரிலும் ஏமாந்து கடந்த ஆறு வருடமாக வட-கிழக்கில் தொடர்ந்து கொண்டிருக்கும் மக்கள் விரோத சக்திகளை மலையக தொழிலாளர், விவசாயிகள் வட-கிழக்கு அப்பாவி மக்களைப் போல் ஏமாந்து விடாது அன்னிய அடிவருடிகளான இத்திய சக்திகளை இனங்கண்டு தகுந்த பாடம் புகட்ட வேண்டும் தவறின் அவஸ்தைப்படப் போவது மலையக பாட்டாளி வாக்கமே.

**வசந்தன்**

## ஆள்பிடி...

(1ம் பக்க தொடர்)

தில் இருந்து தப்பித்து தலைநகரில் தஞ்சம் புகுந்திருந்த இளைஞர்கள் சிலர் கடுமையான சுகயீனம் காரணமாக சொந்த ஊர்களுக்கு திரும்பி சென்ற சமயம் மட்டக்களப்பு சந்திவெளி என்னும் கிராமத்தில் வைத்து அவர்கள் பிரயாணம் செய்த வாகனம் ஆள்பிடி இயக்கம் ஒன்றினால் வழிமறிக்கப்பட்டு கட்டாய பயிற்சிக்காக பிடித்து செல்லப்பட்டுள்ளனர் என அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

(ந.நி)

### தமிழர் ஆட்சியில்

## தமிழுக்குத் தடை'

40 வருடங்களாக தமிழுக்கு சம அந்தஸ்து கோரி தமிழரசுக் கட்சி (சமஷ்டி கட்சி) பல அகிம்சைப் போராட்டங்களை நடாத்தியும் அவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என 1983ம் ஆண்டு இளைஞர்களை ஆயுதம் ஏந்தி போராட வைக்கவும் செய்தார்கள். இதன் முடிவாக அதிகாரப் பரவலாக்கல் என்னும் முடிவை இந்தியா ஏற்படுத்திக் கொடுத்து தமிழர்களை பாதுகாப்பதற்கென தனது படையையும் அனுப்பி வைத்தது. அதன் அடிப்படையில் வட-கிழக்கு மாகாண சபைக்கு தமிழர்களின் விருப்புக்கு மாறாக ஒருவரை முதலமைச்சர் ஆக்கிவைத்து இவ்வுலகம் பூராவும் இந்தியா இலங்கை தமிழர்களுக்கு ஏதோ அளப்பெரிய உதவிகளைச் செய்து விட்டதுபோல் மார்தட்டியும் கொள்கிறனர்.

ஆனால் வட-கிழக்கு மாகாண தமிழர் ஆட்சியில் தமிழுக்கு இடமில்லை. சிங்களப் பகுதிகளில் எல்லாம் சகலவிதமான தமிழ்ப் பத்திரிகைகளும் வாங்கிப்படிக்கக் கூடிய வகையில் இருக்கையில் இலங்கையின் வட-கிழக்கு மாகாணங்களில் தமிழ் பத்திரிகைகளுக்குத் தடை இதேவேளை ஆங்கிலம், சிங்களப் பத்திரிகைகளை வட-கிழக்கு மாகாணங்களில் தாராளமாக வாங்கக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு தமிழ் ஒழிப்பு சம்பவங்களால் பாதிக்கப்படும் தமிழ் மக்கள் வட-கிழக்கு மாகாணங்களிலிருந்து தென்னிலங்கைக்கு அலுவல்களாகச் செல்லும் சமயங்களில் விழுந்தடித்து தமிழ்ப் பத்திரிகைகளை வாங்கிப்படிப்பதைக் காணும் தென்னிலங்கைத் தமிழர்கள் தங்களது தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் எனக்கூறுவதுடன் விரைவில் வட-கிழக்கு மாகாணங்களின் ஆட்சிமொழி ஹிந்தி ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை எனக்கூறுகின்றனர்.

## தமிழ் இளைஞர்கள் எங்கே?

அண்மையில் அன்னிய ஆக்கிரமிப்பு ராணுவத்தார் வல்வையில் மேறகொண்ட அகோர தாக்குதல் சம்பவத்தன்று இடம்பெற்ற சுற்றிவளைப்பு தேடுதலில் முப்பத்தி ஐந்து அப்பாவி தமிழ் இளைஞர்கள் அன்னிய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். இன்றுவரை இவர்களுக்கு என்ன நடந்தது என்பதே தெரியவில்லை. வல்வை சம்பவத்தின் ஊகப்படி தாக்குதலில் மாண்ட அப்பாவி தமிழர்களின் எண்ணிக்கையுடன் இந்த தொகையையும் கூட்டிக் கொள்ள வேண்டியதுதானோ என்னவோ. (ந.வி.நி

## மேலும் ஒருவர் வேவு பார்க்க வந்து வேண்டிக் கட்டினராம்!

இச் சுவையான சம்பவம் பற்றி கூறப்படுவது வட-கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் கட்டாய ஆள்திரட்டு சம்பவங்களில் இருந்து தப்பித்து வந்த தமிழ் இளைஞர்களுக்கு இலங்கை அரசு புகலிடம் வழங்கு முகமாக சேமநல நிலையம் ஒன்று பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மண்டபத்தில் அமைத்திருப்பது வாசகர்கள் அறிந்ததே. இந்நிலையத்தில் தஞ்சம் புகவருபவர்களின் விபரங்களை திரட்ட இந்தியக் கைக்கூலி இயக்கங்களில் ஒரு இயக்கத்தைச் சார்ந்த ஒருவர் கடந்த மாதம் தஞ்சம் புகுந்துள்ள இளைஞர்களிடம் வசமாக மாட்டி வாங்கிக் கண்டிக்கொண்டதும் வாசகர்கள் அறிந்ததே.

இதே வரிசையில் இன்னுமொரு ஒற்றர் இம்முகாமில் தங்கியிருந்து வானொலிக்கு தமது அனுபவங்களை பேட்டி கொடுத்த இளைஞர்களின் பெயர்களையும் அடையாள அட்டை இலக்கங்களையும் சில நாட்களாக சேகரித்து வந்திருக்கிறார். நாளடைவில் இவரில் சந்தேகங்கொண்ட இளைஞர்கள் இவரைப் பிடித்து செமத்தியாக உதைத்திருக்கிறார்கள், இச்சந்தர்ப்பத்தில் இவரிடமிருந்து வானொலிக்குப் பேட்டி கொடுத்த இளைஞர்களின் பெயர்ப்பட்டியலும் அடையாள அட்டை இலக்கங்களும் குறிப்பிட்ட சிட்டை ஒன்று அகப்பட்டுள்ளது, அதற்குப் பின் கேட்கவா வேண்டும், வைத்து வாங்கியிருக்கிறார்கள். இறுதியில் தான் மாகாணசபை ஆளும் கட்சியான ஈ.பி.ஆர்.எல். எப். உறுப்பினர் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்.

புலிகள் புலிகள்தான் பூனைகள் பூனைகள்தான் என இவ்விடயத்தை அறிந்த கொழும்பு தமிழர்கள் பேசிக்கொள்கிறார்கள்,

(ந.நி)

'உண்மை'யின் வளர்ச்சிக்கு எமது உளங் கனிந்த

**நல்வாழ்த்துக்கள்**

ஓர் ஈழ சகோதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை நிரூபிக்கப்பட்டுவிட்டது!

# முஸ்லிம் காங்கிரஸின் முகமூடி கிழிந்தது

## முஸ்லிம் காங்கிரஸ் வேறு! முஸ்லிம்கள் வேறு!

அக்கரைப்பற்றில் வைத்து முஸ்லிம் காங்கிரஸ் வட-கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜனாப் அலி உதுமான் அவர்கள் வட-கிழக்கு மாகாணசபை ஆளுங் கட்சியின் கூட்டணி இயக்கமான ஈ. என். டி. எல். எப். இயக்கத்தினரால் படுகொலை செய்யப்பட்டதை கண்டிக்குமுகமாக வட-கிழக்கு மாகாணசபையின் வரவு-செலவு திட்ட விவாதத்தில் கலந்துகொள்லதில்லை என முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இன்றைய வட-கிழக்கு முஸ்லிம்களின் இக்கட்டான கால கட்டத்தில் முஸ்லிம் காங்கிரசின் நடவடிக்கைகளை சற்று யதார்த்த பூர்வமாக ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியமானதுடன் முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் நிலைப்பாட்டை தீர்மானிக்கவும் உதவியாக இருக்கும்.

அன்னிய ராணுவத்தின் வருகைக்கு பின்னும் வட-கிழக்கு மாகாணசபை தேர்தலுக்கு முன்னும் நடாத்தப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல்களைவிட முஸ்லிம்களின் சார்பில் மாகாணசபையில் முஸ்லிம் பிரதிநிதிகள் முஸ்லிம் வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அப்பாவி முஸ்லிம்களுக்கு எதிராக கிண்ணியா மூதூர், கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய கிராமங்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்கள் அகோரமானவை என்பது எவரும் மறுக்கமுடியாத உண்மை. இத்தாக்குதல்கள் அனைத்தும் மாகாணசபை ஆளுங்கட்சி கூட்டணி இயக்கங்களாலும், முஸ்லிம் காங்கிரஸ் கூறும் முஸ்லிம்களின் பாதுகாப்பு படையான அன்னிய ஆக்கிரமிப்பு ராணுவத்தினுலுமே நடாத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக முஸ்லிம் மக்களுக்கெதிரான தாக்குதல்களின் போதெல்லாம் முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு உகந்தவர்கள் என முஸ்லிம் காங்கிரஸ் கூறப்படும் இந்தியப்படை ஊரடங்கு சட்டங்களை பிறப்பித்து கொலைஞர்களும் கொள்ளையர்களும் முஸ்லிம்களை சொறி நாய்கள் போல் சுட்டுத்தள்ளவும், முஸ்லிம்களின் கடைகளையும், வீடுகளையும் கொள்ளையடிக்கவும் தீயிட்டு நாசப்படுத்தவும் வசதிகள் செய்து கொடுத்தனர் என்பதும் மறுக்க முடியாதது.

இத்தனை கொடூரங்களும் முஸ்லிம்களுக்கெதிராக நடந்து கொண்டிருக்கையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக முஸ்லிம் வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் மாகாணசபை உறுப்பினர்கள் மாகாணசபை அமர்வுகளில் அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லிம்களுக்காக அனுதாப தீர்மானமோ அல்லது ஒரு நிமிட மௌன அஞ்சலி நடவடிக்கையோ மாகாணசபையால் மேற்கொள்ள கூட தயாராக இருக்கவில்லை. இவற்றை தான் செய்யவில்லையென்றாலும் முஸ்லிம்களுக்கு எதிரான கொடூரங்களுக்கு துணை போகும் அன்னிய ராணுவத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து தகுந்த அறிக்கை தான் விடவும் தயாராக இல்லாததுடன் இவற்றுக்கு மாறாக முஸ்லிம் மக்களுக்கு இந்திய ராணுவம்தான் பாதுகாப்பு வழங்குகிறது என அன்னிய ராணுவத்தின் அடாவாடி தனங்களை நியாயப்படுத்தவும் தவறவில்லை. ஆனால் அக்கரைப்பற்றில் தமது கட்சி மாகாணசபை உறுப்பினர் கொலை செய்யப்பட்டு விட்டார் என்றதும் மாகாணசபை அமர்வை பகிஷ்கரிக்க தயாராகி விட்டனர். இச்சந்தர்ப்பத்தில் கூட இந்திய ராணுவத்தின் அடாவடித்தனங்களை தட்டி கேட்க தயக்கம் காட்டுகின்றனர் என்பதை இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தமானதாகும். மாகாணசபை அமர்வை பகிஷ்கரிக்க முஸ்லிம் காங்கிரஸ் எடுத்த முடிவின்மூலம் முஸ்லிம் காங்கிரஸ் வேறு முஸ்லிம் மக்கள் வேறு என்று உண்மையை வெளிப்படுத்திவிட்டனர் எனக்கூறின் அது தவறாகாது.

தேர்தல் காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் மேடைக்கு மேடை குர் ஆனையும், ஹதீஸையும் கூறி தமது சுயநலங்களுக்காக அப்பாவி முஸ்லிம்களை ஏமாற்றிஅவர்களது வாக்குகளை பெற்று மாகாணசபை உறுப்புரிமையையும், பாராளுமன்ற உறுப்புரிமையையும் பெற்றுவிட்டனர். முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு வாக்களித்தது இவர்கள் தமது பிரதிநிதிகளாக செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையிலேயே. ஆனால் இன்று நடந்து கொண்டிருப்பது என்ன? முஸ்லிம்களின் எதிர்பார்பு ஊமை கண்ட கனவாகி விட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் உண்மையில் முஸ்லிம் மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாக இருப்பின் கிண்ணியா தாக்குதலை தொடர்ந்தே தமது மாகாணசபை உறுப்புருமைகளை ராஜினமா செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் பதவிகளையும் சுகபோகங்களையும் இழக்கத்தயாராக இருக்கவில்லை அதற்கு பின்னர் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு முஸ்லிம்கள் ஆளாக்கப்பட்டனர், ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். முஸ்லிம் காங்கிரசோ அன்னிய ஆக்கிரமிப்பு ராணுவத்தையும் அவர்களது அடிவருடிகளையும் நியாயப்படுத்துவதிலேயே குறியாக இருந்து வருகின்றனர். இன்று அவர்களுக்குஆபத்து ஏற்பட்டதும்தான் தமது உறுப்பினர்களை பாதுகாத்து கொள்ளவும் முஸ்லிம் காங்கிரசின் சுயநலத்தை சரியாக இனங்கண்டு கொண்ட முஸ்லிம் மக்களின் கவனத்தை திசை திருப்பி மீண்டும் முஸ்லிம் சமூகத்தை ஏமாற்று முகமாகவே மாகாணசபை வரவு-செலவு திட்டவிவாத அமர்வை பகிஷ்கரிக்கும் நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர்.

இவர்கள் முஸ்லிம்களை கைவிட்டு விட்டபடியால் இவர்களை அரியாசனம் ஏற்றி வைத்த முஸ்லிம்கள் இவர்கள் தங்கள் வாக்குகளால் பெற்ற மாகாணசபை பாராளுமன்ற உறுப்புரிமைகளை ராஜினமா செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். ஈடேற முடியாத எதிர்பார்ப்புதான் என்றாலும் முஸ்லிம் மக்களின் அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத இன மதவாத சுயநல அரசியல்வாதிகள் இனம் காட்டப்பட்டு விட்டார்கள் இனிமேல் இவ்வாறான அரசியல் தீய சக்திகளின் ஏமாற்று வித்தைகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் எடுபடமாட்டாது என்பதை உறுதியாக நம்பலாம்.

ஹனிபா

## விடுதலைப் புலிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற இந்தயுத்தத்தில் விடுதலை புலி கரந்தடிப் படை குழுவை தலைமை தாங்கி சென்ற விடுதலை புலிகளின் கப்டன் தரன் தனது சொந்த மண்ணையும் சொந்த சமூகத்தையும் சூறையாட வந்த அன்னிய துப்பாக்கி குண்டுக்கு தன் இன்னுயிரை பலிகொடுத்து வீரமரணம் எய்தினர். இவருடன் ஐந்து விடுதலை போராட்ட வீரர்கள் காயமடைந்தனர். வீரமரணம் எய்திய தமது கப்டன் தரனுடைய தியாக உடலையும் மற்றும் காயமடைந்தவர்களையும் அன்னிய பிணம் தின்னி ராணுவம் கைப்பற்றி விடாதபடி ஏனைய போராளிகள் தம்முடன் தூக்கி சென்று விட்டனர்.

இத் தாக்குதலில் இந்தியப் படையினரிடமிருந்து ஓட்டோ எஸ். எல். ஆர். இரண்டு, மோட்டார் ஒன்றி, செல் ஏழு, எஸ். எல். ஆர். ஒன்று கண்ணி வெடி பரிசோதிக்கும் கருவி ஒன்று, எஸ். எம். ஜி-ஒன்று ஆகிய அன்னிய படையின் ஆயுத உபகரணங்களை விடுதலை புலி கரந்தடிப்படையினர் பறித்தெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சுருட்டு, புகையிலை, சுத்தமான நல்லெண்ணெய், கலப்பற்ற பனங்கட்டி மற்றும் தினசரி பத்திரிகைகள், மாத, வார சஞ்சிகைகள், பாடசாலை உபகரணங்கள், அழகு சாதனப் பொருட்கள், இவற்றுடன் சேர்த்து கேக், பிஸ்கட்வகையறுக்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளக் கூடிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

கே. குழந்தைவேல் அன் சன்

இல. 12, ஜெம்பட்டா தெரு,

கொழும்பு 13.

இங்கு உங்களின் நேர்த்திகளை கொச்சிக்கடை அந்தோனியாருக்கு நேர்த்தியாக முடித்துக்கொள்ள தேவையான அளவுகளில் மெழுகுவர்த்திகளை பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் அபிமான பத்திரிகையான "உண்மை"யும் இங்கே கிடைக்கும்

இப்பத்திரிகை கொழும்பு 14, 65, பெரிஇஸன் வீதி உண்மை வெளியீட்டகத்தினுல் கொழும்பு சாவிஞே அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org